**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம்.**

முன்னிலை- **திருமதி. செ. மகாலட்சுமி, பி.ஏ., எம்.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, வந்தவாசி.

(திருவள்ளுவர் ஆண்டு 2057 விஸ்வாவசு, வருடம் பங்குனி மாதம் 26ஆம் நாள்)

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள், 09ஆம் நாள் வியாழக்கிழமை

**அசல் வழக்கு எண்.8/2023**

**CNR No.TNTM16-000005-2023**

ஷோபனா ....வாதி

... எதிர் ...

1. புண்ணியகோட்டி
2. சுரேஷ்
3. குமார்
4. பிச்சாண்டி .....பிரதிவாதிகள்

இவ்வழக்கு கடந்த 09.04.2026 அன்று என் முன்னர் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எ. நவாப்ஜான் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எ. வெங்கடேசன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் தரப்பில் எதிர் வழக்குரை தாக்கல் செய்யப்பட்ட நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் தனது வக்காலத்தை திரும்ப பெற்றுக் கொள்வதாக குறிப்பாணை தாக்கல் செய்ததின்பேரில், பிரதிவாதிகளை அழைத்து வருகையின்மையால் அவர்களை பொறுத்து தோன்றாத் தரப்பினர்களாக கருதப்பட்டு வாதியின் வாதுரையை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்,

**தீர்ப்புரை**

தாவா செட்டியுல் சொத்தினை வாதி அமைதியான முறையில் அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ முகவர்களோ இடையூறு செய்யக்கூடாது என்று பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர தடை

உத்தரவு பிறப்பிக்கவும், தாவா செலவுத் தொகையை பிரதிவாதிகள் வாதிக்கு செலுத்தக்கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

02. **வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம் : -**

**2.1)** வாதி தெரிவித்து கொள்வது யாதெனில், தாவா சொத்து விவரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்து ஆதியில் ஒரு ராமச்சந்திர அய்யர் என்பவருக்கு பாத்யப்பட்டது என்றும், இராமச்சந்திர அய்யரிடம் இருந்து செட்டியுல் சொத்தை 25.01.1964ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரய பத்திர முன்னிலைக்கு வீராசாமி கவுண்டர் குமாரர் பச்சை கவுண்டர் என்பவர் கிரயம் பெற்று கிரய தேதியலேயே சுவாதீனம் அடைந்து ஆண்டு அனுபவித்து வந்து கடந்த 02.04.1971 தேதியில் கோபால் கவுண்டர் குமாரர் ராமகிருஷ்ண கவுண்டருக்கு கிரயம் கொடுத்து கிரய தேதியிலேயே சுவாதீனமும் ஒப்படைத்துவிட்டார் என்றும், தாவா செட்டியுல் சொத்தினை கடந்த 02.04.1971ல் கிரயம் பெற்ற இராமகிருஷ்ணன் என்பவர் கிரய தேதியில் இருந்து செட்டியுல் சொத்தினை எவர் குறுக்கீடு ஏதும் இன்றி ஆண்டு அனுபவித்து வந்து கடந்த 35 வருடம் முன்பு காலமாகிவிட்டார் என்றும், மேற்படி இராமகிருஷ்ணன் என்பவர் குடும்பத்தில் நடந்த பூர்வீக சொத்துக்கள் சம்பந்தமான பாகப்பிரிவினையில் 25.02.2015 தேதியிட்ட பதிவு செய்த பாகப் பிரிவினை பத்திரத்தில் இதர சொத்துக்கள் உடன் செட்டியுல் சொத்தும் மேற்படி இராமகிருஷ்ணன் என்பவரது வாரிசுகளில் ஒருவரான தசரதன் என்பவருக்கு சி செட்டியுல் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

**2.2)** மேற்படி 25.02.2015ம் தேதியில் குடும்ப பாகத்தில் செட்டியுல் சொத்து உள்பட இதர சொத்துக்களை பாகமாக பெற்ற மேற்படி தசரதன் என்பவர் செட்டியுல் சொத்தை எவர் குறுக்கீடு ஏதும் இன்றி ஆண்டு அனுபவித்து வந்து கடந்த 03.01.2022 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் முன்னிலைக்கு அவரது தாயாரான மல்லிகா என்பவருக்கு செட்டியுல் சொத்து உள்பட இதர

சொத்துக்களை எழுதி கொடுத்து மேற்படி பத்திர பதிவு தேதியிலேயே சுவாதீனமும் ஒப்படைத்துவிட்டார் என்றும், 03.01.2022 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் முன்னிலைக்கு கிடைக்கப் பெற்ற மல்லிகா என்பவர் கடந்த 01.06.2022 தேதியில் கிரய பத்திரம் முன்னிலைக்கு வாதிக்குக் கிரயம் பதிவு செய்துக் கொடுத்துவிட்டார் என்றும். 01.06.2022 தேதியிட்ட கிரயப் பத்திரத்தில் மல்லிகாவின் குமாரரான தசரதன் என்பவரும் சாட்சியாக கையெழுத்து செய்துள்ளார் என்றும், செட்டியுல் சொத்தை கிரயம் பெற்ற வாதி கிரய தேதியான 01.06.2022ம் தேதியிலேயே தாவா சொத்தினை தன் சுவாதீனத்தில் வைத்து நாளது வரை எவ்வித இடையுறுமின்றி ஆண்டு அனுபவித்து வருகிறார் என்றும் தாவா சொத்தை வாதிக்கு கிரயம் செய்த குடும்பத்தார் அனுபவ பாத்யதை முன்னிலைக்கும் செட்டியுல் சொத்தில் தங்கள் Title-யை Perfect செய்துக் கொண்டனர் என்றும், தாவா சொத்துக்கான பட்டாவும் வாதிக்கு கிரயம் கொடுத்தவரான மல்லிகாவின் குமாரர் தசரதன் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றும், பட்டா எண்.1914 என்றும் சொல்லப்பட்டுள்ளது.

**2.3**) தாவா செட்டியுல் சொத்திற்கான புல எண்.366/2பி-ல் மொத்த விஸ்தீரணம் 0.24 சென்ட் என்றும், வாதி மல்லிகா என்பவரிடம் இருந்து கிரயம் பெற்ற செட்டியுல் சொத்தான 0.04 சென்ட் போக 0.20 சென்ட் பிரதிவாதிகளுக்கும் மற்றும் இதர நபர்களுக்கும் பாகம் உள்ளது, யாருக்கு எவ்வளவு என்ற விவரம் வாதிக்கு தெரியாது என்றும், 1ம் பிரதிவாதி வாதிக்கு தாவா சொத்தை கிரயம் கொடுத்த மல்லிகா என்பவருடன் செட்டியுல் சொத்தை ஈன கிரயம் கேட்டதற்கு மேற்படி மல்லிகா என்பவர் மறுத்துவிட்டு, வாதிக்கு சரியான பிரதிபலனுக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றும், 1ம் பிரதிவாதி செட்டியுல் சொத்தை கிரயம் பெறவேண்டாம் என்று வாதியிடம் கேட்டு கொண்டும் வாதி கிரயம் பெற்றதால் வாதிக்கும் 1ம் பிரதிவாதிக்கும் விரோதம் மற்றும் மனஸ்தாபம் என்றும், மேற்படி விரோதம் காரணமாக கடந்த 10.09.2022ம் தேதி அன்று அரசின் புதிய விதிகளின்படி அளந்து பட்டா

கொடுக்க சொத்தை பார்வையிட்டு அளவீடு செய்ய சர்வேயர் மற்றும் விஏஓ வந்தபோது 1ம் பிரதிவாதி அவரது நண்பர்களான 2 முதல் 4 பிரதிவாதிகளும் செட்டியுல் சொத்தை அளவீடு செய்யவிடாமல் வீண் தகராறு செய்து சர்வேயர் மற்றும் உதவியாளர்களை திருப்பி அனுப்பி விட்டனர் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

**2.4**) பிரதிவாதிகளின் செயலை கண்டித்து இனி எதிர்வரும் காலங்களில் செட்டியுல் சொத்தை அளந்து அத்து கண்டு வாதி பேரில் பட்டா வாங்க எடுக்கும் எந்தவித நடவடிக்கைகளிலும் தலையிடக் கூடாது என்று பிரதிவாதிகளுக்கு வாதி கடந்த 10.10.2022ல் வழக்கறிஞரின் நோட்டினை அனுப்பினார் என்றும், மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டு நாளது வரை எவ்வித பதிலும் கொடுக்கவில்லை என்றும், வாதி 10.10.2022 தேதியில் பிரதிவாதிக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பின் முன்னிலைக்கு வாதி பேரில் மேலும் விரோதம் கொண்டு பிரதிவாதிகள் அனைவரும் கடந்த 05.01.2023 தேதியில் தாவா சொத்தில் அத்துமீறி ஆக்ரமிப்பு செய்ய முயன்றபோது பிரதிவாதிகளின் சட்டத்திற்கு புறம்பான செயல்  வாதி அருகில் இருந்த இதர நபர்களின் உதவியுடன் தற்காலிகமாக தடுத்து நிறுத்தி விட்டார் என்றும், தாவா சொத்திற்கும் பிரதிவாதிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், தாவா சொத்தில் கடந்த 02.04.1971 தேதியில் இருந்து வாதிக்கு கிரயம் கொடுத்தவரின் குடும்பத்தாரிடம் இருந்தும் 01.06.2022 தேதியில் தாவா சொத்து வாதியின் சுவாதீனம் மற்றும் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றும், தாவா சொத்து காலியாக இருந்தாலும், தாவா சொத்தின் பட்டா வாதியின் பெயரில் வழங்கப்படாததாலும், தாவா சொத்துக்கு தீர்வை எதுவும் செலுத்தப்படவில்லை என்றும்,  இனி எதிர்வரும் காலத்தில் கோர்ட்டார் உத்தரவு இல்லாமல் தாவா சொத்தில் ஆக்ரமிப்பு செய்ய எந்த விதத்திலும் எதிர்வாதிகள் முயற்சி செய்தால் கோர்ட்டார் உத்தரவு இல்லாமல்  வாதியால் தடுத்து நிறுத்த இயலாது என்றும், எனவே வாதி தாவா சொத்தை தான் அனுபவிப்பதை எதிர்வாதிகள் எந்த

வகையிலும் தடை செய்யக் கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கேட்டு வாதியால் தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3). 3ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு மற்ற பிரதிவாதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிர் வழக்குரையின் சுருக்கம்.

**3.1)** வாதியின் தாவாவே பொய்யானவை என்றும், மோசவிதமானவை, எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டியவை என்றும், வாதியின் தாவா சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், வாதியின் தாவா விவரம் முற்றிலும் தவறானவை என்றும், தாவா விவரங்களில் இந்த பிரதிவாதிகள் ஒப்புக் கொண்ட சங்கதிகள் தவிர்த்த மற்ற ஏனைய விவரங்களை வாதியே சட்டப்படி நிரூபிக்க வேண்டும் என்றும், தாவா வாதி தாவாவில் 3ம் பாராவில் தாவா சொத்து ஆதியில் ஒரு ராமச்சந்திர அய்யர் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும், மேற்படி ராமச்சந்திர அய்யரிடமிருந்து தாவா சொத்தை 25.01.1964 தேதியில் பதிவு செய்யப்பட்ட கிரய பத்திர முன்னிலைக்கு வீராசாமி கவுண்டர் குமாரர் பச்சை கவுண்டர் கிரயம் பெற்று சுவாதீனம் அடைந்து அனுபவித்து வந்து கடந்த 02.04.1971 தேதியில் கோபால் கவுண்டர் குமாரர் இராமகிருஷ்ண கவுண்டருக்கு கிரயம் கொடுத்து சுவாதீனம் ஒப்படைத்துவிட்டார் என்று தாவாவில் கண்டுள்ளதை இப்பிரதிவாதிகள் மறுக்கவில்லை என்றும் சொல்லப்பட்டுள்ளது.

**3.2)** மேலும் வாதி தாவாவில் 4ம் பாராவில் தாவா சொத்தினை கடந்த 02.04.1971ல் கிரயம் பெற்ற ராமகிருஷ்ண கவுண்டர் கிரய தேதியில் இருந்து தாவா சொத்தை எவ்வித குறுக்கீடும் இன்றி ஆண்டு அனுபவித்து வந்து கடந்த 35 வருடம் முன்பு காலமாகிவிட்டார் என்றும், அதன் பின்னர் இராமகிருஷ்ண கவுண்டர் குடும்பத்தில் கடந்த பூர்வீக சொத்துகள் சம்பந்தமாக பதிவு செய்துக் கொண்ட பாகப்பிரிவினையில் இதர சொத்துக்கள் உடன் தாவா சொத்தும் மேற்படி இராமகிருஷ்ண கவுண்டரின் வாரிசுகளில் ஒருவரான தசரதன்

என்பவருக்கு சி செட்டியுல் பாகமாக ஒதுக்கப்பட்டது என்றும், மேற்படி பாகப் பிரிவினை பத்திரம் 25.02.2015ல் ஏற்படுத்தப்பட்டது என்றும், அது முதல் தாவா சொத்தை எவர் குறுக்கீடும் இன்றி தசரதன் அனுபவித்து வந்து கடந்த 03.01.2022 தேதியில் தான செட்டில்மெண்ட் முன்னிலைக்கு அவரது தாயார் மல்லிகா என்பவருக்கு தாவா சொத்து உள்பட இதர சொத்துக்களையும் பத்திர பதிவு செய்து கொடுத்து சுவாதீனம் ஒப்படைத்துவிட்டதாக தாவாவில் கண்டுள்ள விவரம் பற்றி இப்பிரதிவாதிகளுக்கு தாவாவிற்கு பின்னிட்டு தான் தெரிய வந்தது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

**3.3)** இராமகிருஷ்ண கவுண்டர் இறப்புக்கு பின்னிட்டு அவரின் வாரிசுதாரர்களுக்கு இடையே ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் மருதாடு கிராம புஞ்சை சர்வே எண்.366/2பி-ல் மொத்த விஸ்தீரணம் 0.23 சென்ட் என்றும் அவற்றில் 5ல் ஒரு பாகம் 0.05 சென்ட் என மட்டும் கண்டெழுதப்பட்டு இருக்கும்பட்சத்தில் அதற்கு பின்னிட்டு மேற்படி தசரதன் அவர்கள் அவரது தாயார் மல்லிகா பெயருக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ள தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் மருதாடு கிராம புஞ்சை சர்வே எண்.366/2பி-ல் 0.05 சென்ட்டுக்கு ஐக்பந்திகள் மற்றும் நான்கு புறமும் அளவுகள் குறிப்பிட்டு பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது அவை சட்டப்படி செல்லாது என்றும், மேலும் மேற்படி ராமகிருஷ்ண கவுண்டர் கடந்த 02.04.1971ல் மருதாடு கிராம புஞ்சை சர்வே எண்.366/2பி-ல் 0.04 சென்ட் கிரயம் பெற்றிருக்கும் பட்சத்தில் ராமகிருஷ்ண கவுண்டர் இறப்புக்கு பின்னிட்டு அவரின் வாரிசுதாரர்களுக்கு இடையே ஏற்படுத்திக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரத்தில் எவ்வாறு 0.05 சென்ட் என பத்திரம் பதிவு செய்யப்பட்டது என்பதற்கான எந்த விளக்கமும் தாவாவில் கிடையாது என்றும், மேற்படி தப்பு பத்திரம் முன்னிலைக்கு வாதி கடந்த 01.06.2022 தேதியில் தாவா சொத்தை மேற்படி மல்லிகா என்பவரிடம் இருந்து கிரயம் பெற்று வாதி தாவா சொத்தில் தப்புரிமை பாராட்டி வருகின்றார் என்றும், மேலும் தாவா சொத்தில் வாதிக்கு நாளது வரை எவ்வித அனுபவமும் கிடையாது என்றும், அதனால் தாவா சொத்துக்கான

பட்டாவும் வாதி பெயரில் கிடையாது என்றும், தாவா சொத்தை கடந்த 10.09.2022ம் தேதியில் பார்வையிட்டு அளவீடு செய்ய சர்வேயர் மற்றும் விஏஓ வந்தபோது இப்பிரதிவாதிகள் அளவீடு செய்ய விடாமல் தகராறு செய்து திருப்பி அனுப்பிவிட்டதாக வாதி தாவாவில் சொல்லியதை இப்பிரதிவாதிகள் வன்மையாக மறுக்கின்றனர் என்றும், அதை வாதியே சட்டப்படி நிரூபிக்கவேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

**3.4)** வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை இப்பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டவுடன் இப்பிரதிவாதிகளில் ஊரில் உள்ள முக்கியஸ்தர்கள் முன்னிலையில் வாதியிடம் சென்று வழக்கறிஞர் அறிவிப்பு குறித்து கேட்டதற்கு பிறர் தூண்டுதல் காரணமாக அனுப்பிவிட்டதாகவும், அந்த அறிவிப்பிற்கு எவ்வித முகாந்திரமும் கிடையாது என்றும், அதனால் அவசரப்பட்டு அறிவிப்பு அனுப்பியதற்கு வருந்துவதாக கூறி வாதி வருத்தம் தெரிவித்து அதனால் பதில் அறிவிப்பு எதுவும் வேண்டாம் என்று வாதி கேட்டுக் கொண்டதால் இப்பிரதிவாதிகள் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்பதே உண்மையாகும். ஆனால் வாதி இந்த உண்மை விவரங்களை எல்லாம் மறைத்து பொய்யான சங்கதிகள் உடன் தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

**3.5)** தாவா சொத்துக்கு பக்கத்தில் கிழக்கு திசையில் இப்பிரதிவாதிகளுக்கு பாத்யப்பட்ட மருதாடு கிராம புஞ்சை சர்வே எண்.366/2பி-ல் 0.04 சென்ட் நிலம் உள்ளது என்றும், மேற்படி 0.04 சென்ட்டில் 2 முதல் 4 வரையுள்ள பிரதிவாதிகளுக்கு 3 சென்ட் நிலம் கூட்டு பாத்யமும் 1ம் பிரதிவாதிக்கு 0.01 சென்ட் நிலம் தனிப்பட்ட பாத்யம் உரிமை உள்ளது என்றும், மேற்படி 2 முதல் 4 வரையுள்ள பிரதிவாதிகளுக்கு கூட்டு பாத்யம் உள்ள 3 சென்ட்டை தாவா 2ம் பிரதிவாதியின் பாட்டனாரான வடிவேல் என்பவரின் தந்தை நடேச தம்பிரான், 3ம் பிரதிவாதியின் பாட்டனரான சின்னசாமி தம்பிரான் மற்றும் 4ம் பிரதிவாதியின் தந்தையான பழனி தம்பிரான் ஆகியோர் சேர்ந்து கடந்த 25.01.1964ல் ஒரு சுப்பராமய்யர் குமாரர் ராமச்சந்திர அய்யரிடம் இருந்து

கிரயம் பெற்று எவர் குறுக்கீடும் இன்றி அனுபவித்து வந்து அவர்கள் காலாந்திரத்துக்கு பிறகு வாரிசு ஓதாவில் தாவா 2 முதல் 4 வரையுள்ள பிரதிவாதிகள்அனுபவித்து வருகின்றனர் என்றும், அதேபோல் மேற்படி தாவா 1ம் பிரதிவாதிக்கு தனிப்பட்ட பாத்யமுள்ள 0.01 சென்ட்டை 1ம் பிரதிவாதி கடந்த 06.10.2017ல் ஒரு கோவிந்தசாமி குமாரரான மனோகரன் என்பவரிடம் இருந்து கிரயம் பெற்று அனுபவித்து வருகின்றனர் என்றும், வாதி கிரயம் பெற்றுள்ள தாவா சொத்து இப்பிரதிவாதிகள் சொத்துக்கு பக்கத்தில் உள்ளதால் தப்புரிமை பாராட்டிக் கொண்டு இப்பிரதிவாதிகளுக்கு எதிராக பொய்யான தாவாவை தாக்கல் செய்துள்ளார் என்றும் சொல்லப்பட்டுள்ளது.

**3.6**) தாவா வாதி கிரயம் பெறப்பட்டதாக கூறும் தாவா சொத்து தவறான ஜக்குபந்தி முன்னிலைக்கு கிரயம் பெற்று இப்பிரதிவாதிகளுக்கு பாத்யப்பட்ட மருதாடு கிராம புஞ்சை சர்வே எண்.366/2பி-ல் 0.04 சென்ட்டில் வாதி தப்புரிமை பாராட்ட முற்படுவதை இப்பிரதிவாதிகளால் ஏற்க இயலாது என்றும், மேலும் தேவைப்பட்டால் இப்பிரதிவாதிகள் கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்யும் உரிமையையும் இதன் மூலம் ரிசர்வ் செய்துக் கொள்கின்றனர் என்றும், வாதி தொடர்ந்துள்ள தாவா இந்த பிரதிவாதிகள் மீது கொண்டுள்ள முன் விரோதத்தால் தொடரப்பட்டவை என்றும், மேலும் ஊரில் உள்ள விஷமிகளான சில மூன்றாம் நபர்கள் தூண்டுதல் காரணமாக வாதி தாவா தொடர்ந்துள்ளார் என்றும், தாவா அடிப்படை ஆதாரமற்றவை என்றும், தாவா அவசியமற்ற ஒன்று என்றும், வியாஜ்யமூலம் தவறு என்றும், தாவாவில் வாதி கோரியுள்ள பரிகாரமும் தவறு என்றும், வாதி செலுத்தியுள்ள நீதிமன்றக் கட்டணமும் தவறானவை என்றும் சொல்லப்பட்டுள்ளது.

**3.7**) மேலும் தாவா பிரதிவாதிகளுக்கு பாத்யப்பட்ட 0.04 சென்ட் தாவா சொத்தை ஒட்டி அமைந்துள்ளதால் வாதி கூடுதலாக அடைந்து ஆதாயம் தேடிக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தில் இப்பிரதிவாதிகளுக்கு பாத்யப்பட்டு அனுபவத்தில் இருந்து வரும் சொத்தை சட்ட விரோதமாக

அபகரித்து அடைந்துவிட வேண்டும் என்ற கெட்ட நோக்கத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இத்தாவா இப்பிரதிவாதிகளை அலைக்கழிக்கவும், இப்பிரதிவாதிகளின் அமைதியான அனுபவத்தை கெடுக்கும் விதமாக வாதி இந்த பொய்யான தாவாவை தாக்கல் செய்து இப்பிரதிவாதிகளை அலைக்கழித்து வருவதால் இப்பிரதிவாதிகளுக்கு வாதி தரப்பில் சி.பி.சி. செக்ஷன் 35(எ)ன்படி இழப்பீடு தொகை வழங்க வேண்டும் என இப்பிரதிவாதிகள் கோருகின்றனர் என்றும், இந்த பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என சொல்லப்பட்டுள்ளது.

**4**). இவ்வழக்கில் வழக்கு விசாரணையின் போது பிரதிவாதிகள் அழைத்தும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தால், அவர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, வழக்கு விசாரணை பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினர்களாக்கப்பட்டு, வாதி தரப்பு சாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**5**. இவ்வழக்கு வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்து, வா.த.சா.ஆ.1 முதல் வா.த.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. நீதிமன்ற சான்றாவணம் 1 மற்றும் 2 குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**6. இவ்வழக்கில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியதா என்பதேயாகும்.**

**7. வாதி தரப்பு வாதம் கேட்கப்பட்டது.** தாவா சொத்துக்கள் வாதிக்கு கடந்த 01.06.2022ஆம் தேதியிட்ட கிரய ஆவண முன்னிலைக்கு பாத்யப்பட்ட

சொத்துக்கள் என்றும், கிரயம் பெற்ற தேதியில் இருந்து தாவா சொத்துக்களை வாதி சுவாதீனத்தில் வைத்து நாளது தேதி வரை எவ்வித இடையுறும் இன்றி ஆண்டு அனுபவித்து வருவதாகவும், தாவா சொத்துக்கும் 1ம் பிரதிவாதிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், தாவா சொத்தை வாதிக்கு கிரயம் கொடுத்த மல்லிகா என்பவருடன் 1ம் பிரதிவாதி சொத்துக்களை ஈனக்கிரயம் கேட்டதற்கு மேற்படி மல்லிகா மறுத்துவிட்டதாகவும், வாதிக்கு சரியான பிரதிபலனுக்கு கொடுத்துவிட்டார் என்றும், 1ம் பிரதிவாதியின் பேச்சை கேட்காமல் வாதி தாவா சொத்தை கிரயம் பெற்றதால் 1ம் பிரதிவாதிக்கும் வாதிக்கும் விரோதம் மற்றும் மனஸ்தாபம் ஏற்பட்டு அதன் காரணமாக 10.09.2022 அன்று அரசு புதிய விதிகளின்படி அளந்து பட்டா கொடுக்க சொத்தை பார்வையிட்டு அளவீடு செய்ய சர்வேயர் மற்றும் வி.எ.ஒ. வந்தபோது 1ம் பிரதிவாதி அவரது நண்பர்களான 2 முதல் 4 பிரதிவாதிகள் உடன் சேர்ந்து தாவா செட்டியுல் சொத்தை அளவீடு செய்யவிடாமல் வீண் தகராறு செய்து திருப்பி அனுப்பிவிட்டதாகவும், எனவே மேற்படி பிரதிவாதிகளின் செயலை கண்டித்து வாதி பிரதிவாதிகளுக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியும், மீண்டும் தாவா சொத்தில் பிரதிவாதிகள் வாதியின் அனுபவத்தை இடையுறு செய்வதாகவும், எனவே, வாதி பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**8**) இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்து, 25.01.1964 தேதியிட்ட பச்சைப்ப கவுண்டருக்கு, ராமச்சந்திர ஐயர் எழுதிக் கொடுத்த கிரய ஆவணத்தின் அசல் **வா.த.சா.ஆ1** ஆகவும், 02.04.1971 தேதியிட்ட இராமகிருஷ்ண கவுண்டருக்கு பச்சையப்ப கவுண்டர் எழுதிக் கொடுத்த கிரய ஆவணத்தின் அசல் **வா.த.சா.ஆ.2** ஆகவும், 01.06.2022 தேதியிட்ட வாதியின் பெயருக்கு மல்லிகா என்பவர் எழுதிக் கொடுத்த கிரய ஆவணத்தின் அசல் **வா.த.சா.ஆ.3** ஆகவும், 10.10.2022 தேதியிட்ட வாதியின் வழக்கறிஞர் பிரதிவாதிகளுக்கு வாதியின் சார்பாக அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் அஞ்சல் ரசீதுடன் ஆகியவை **வா.த.சா.ஆ.4**

ஆகவும், 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.த.சா.ஆ.5** ஆகவும், 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.த.சா.ஆ.6** ஆகவும், 3ம் பிரதிவாதி பெயரில் உள்ள அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.த.சா.ஆ.7** ஆகவும், 4ம் பிரதிவாதி பெயரில் உள்ள அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.த.சா.ஆ.8** ஆகவும், உதவி ஆய்வாளர் பெயரில் உள்ள அஞ்சல் ஒப்புகை அட்டை **வா.த.சா.ஆ.9** ஆகவும், நீதிமன்ற ஆணையர் அறிக்கை **நீ.ம.சா.ஆ.1** மற்றும் நீதிமன்ற ஆணையர் வரைபடம் **நீ.ம.சா.ஆ.2** ஆகவும் குறியீடு செய்து தன் வழக்கை உரிய ஆவணங்கள் மூலம் நிரூபித்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

**9)** வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் தாவா சொத்துகள் யாவும் கடந்த 01.06.2022ம் தேதியிட்ட கிரய ஆவணத்தின்படி வாதிக்கு பாத்யப்பட்ட சொத்துக்கள் என்றும், தாவா சொத்துக்களுக்கும் 1ம் பிரதிவாதிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், வாதிக்கு கிரயம் கொடுத்த மல்லிகா என்பவரிடம் 1ம் பிரதிவாதி வழக்கு சொத்துக்களை ஈனக் கிரயம் கேட்டதாகவும், அதற்கு மல்லிகா என்பவர் கிரயம் செய்துக் கொடுக்காததாலும் வாதி தாவா சொத்துக்களை கிரயம் பெற்றதால் வாதியின் மீது விரோதமும் மனஸ்தாபமும் கொண்ட 1ம் பிரதிவாதி தாவா சொத்தை வாதி அனுபவிப்பதை தடுத்து இடையூறு செய்த காரணத்தினாலும், தாவா சொத்துக்களுக்கு அளந்து பட்டா கொடுப்பதற்காக நில அளவையர் மற்றும் வி.எ.ஒ தாவா சொத்து இடத்திற்கு வந்தபோது 1ம் பிரதிவாதியும், 2 முதல் 4 பிரதிவாதிகளும் அதை தடுத்துவிட்டதாகவும், மேற்படி செயல்களை கண்டித்து வாதி பிரதிவாதிகளுக்கு கடந்த 10.10.2022ல் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாகவும், மேற்படி அறிவிப்பை பெற்றுக் கொண்ட பிரதிவாதிகள் அதற்கு பதில் அறிவிப்பு அனுப்பாமலும், மீண்டும் வாதியின் அமைதியான அனுபவத்தை தடை செய்து வந்ததாகவும், கடந்த 05.01.2023ம் தேதியில் தாவா சொத்தில் அத்துமீறி ஆக்ரமிப்பு செய்ய முயன்றபோது பிரதிவாதிகளின் சட்டத்திற்கு புறம்பான செயலை வாதி அருகில் இருந்த

நபர்களின் உதவியால் தடுத்து நிறுத்தியதாகவும், தாவா சொத்து கடந்த 02.04.1971 தேதியில் இருந்து வாதிக்கு கிரயம் கொடுத்தவரின் குடும்பத்தாரிடமிருந்து தாவா சொத்தை வாதி கிரயம் பெற்று அனுபவம் பெற்று அனுபவித்து வருவதாகவும், எனவே தாவா சொத்திற்கும் 1ம் பிரதிவாதிக்கும் எவ்வித உரிமையும் இல்லை என்றும், வாதியின் அமைதியான அனுபவத்தை இடையூறு செய்ய பிரதிவாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகள் தடை செய்ததால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வாதி தனது வழக்கை உரிய சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளார் என்றும், எனவே வழக்கானது வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாக வேண்டும் என வாதிட்டார்.

**10)** தற்போது இவ்வழக்கின் வாதி தனது வழக்கை நிரூபித்துள்ளாரா என பார்க்கும்போது, வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.த.சா.ஆ.1 முதல் வா.த.சா.ஆ.3 வரையிலான ஆவணங்களை இந்நீதிமன்றம் சீர்தூக்கி பரிசீலனை செய்து பார்த்தபோது, தாவா சொத்துக்கள் வாதிக்கு பாத்யப்பட்டது என்பது தெரிய வருகிறது. மேலும் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.த.சா.ஆ.4 முதல் வா.த.சா.ஆ.9 வரையிலான ஆவணங்களை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்க்கும்போது, வாதியின் அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகள் தடை செய்துள்ளார்கள் என்பதும், மேற்படி பிரதிவாதிகளின் செயலிற்கு வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதும், மேற்படி அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டும் மீண்டும் வாதியின் அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகள் தடை செய்துள்ளார்கள் என்பதும் தெரிய வருகிறது. மேலும் வாதி தனது வழக்கை நிரூபிப்பதற்காக நீதிமன்றம் மூலம் நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரியும், நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துக்களை நில அளவையர் மூலம் அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்ய மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டும், நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துக்களை பார்வையிட்டு

அளவீடு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி அறிக்கை மற்றும் வரைபடம் நீ.ம.சா.ஆ.1 மற்றும் நீ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி நீதிமன்ற ஆணையர் மற்றும் வரைபடத்தை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்க்கையில், தாவா சொத்தானது வாதியின் கிரய ஆவணப்படி அளவீடுகள் சரியாக உள்ளதாகவே தெரிய வருகிறது. மேலும் மேற்படி நீதிமன்ற ஆணையர் தாவா சொத்துக்களை பார்வையிட்டு நில அளவையரின் உதவியுடன் அளவீடு செய்ய பிரதிவாதிளுக்கு வி.எ.ஒ மூலம் தெரிவித்ததாகவும், அதற்கு பிரதிவாதிகள் ஒத்துழைக்க மறுத்து விட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு பிரதிவாதிகள் தரப்பில் ஆட்சேபனை ஏதும் தாக்கல் செய்யவில்லை என தெரிய வருகிறது. எனவே, வாதி தாவா சொத்தை கிரயம் பெற்ற நாள் முதல் அனுபவித்து வருவதும், மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் தெரிய வருகிறது.

**11)** வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வா.த.சா.ஆ.4 முதல் வா.த.சா.ஆ.9 வரையிலான ஆவணங்களை இந்நீதிமன்றம் பரிசீலனை செய்து பார்க்கும்போது, வாதி தாவா சொத்தை பயன்படுத்துவதை பிரதிவாதிகள் தடுத்து இடையூறு செய்திருக்கிறார்கள் என்பது தெரிய வருகிறது. இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் வாதியின் வழக்கு மற்றும் சாட்சிய சான்றாவணங்களை மறுத்துரைக்கும் விதத்தில் எந்தவொரு சாட்சிய சான்றாவணங்களும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. அவ்வாறான நிலையில், இவ்வழக்கானது வாதி தரப்பில் உரிய முறையில் நிரூபிக்கப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதி வாதி கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கக்கூடியது என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

**12).** இவ்வழக்கானது வாதிக்கு ஆதரவாக தீர்வு காணப்பட்ட நிலையில், வாதிக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியதல்ல என தீர்மானித்து, வழக்கின் தன்மை மற்றும் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு இவ்வழக்கில் செலவுத் தொகை ஏதும் விதிக்கப்படவில்லை.

**இறுதியாக,**

**1. வாதியின் வழக்கு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. தாவா செட்டியுல் சொத்தினை வாதி அமைதியான முறையில் அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ அவர்களின் ஆட்களோ முகவர்களோ எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகின்றது.**

**2. செலவுத் தொகை இல்லை.**

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 09ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MAHALAKSHMI C
Digitally signed by MAHALAKSHMI C
Date: 2026.04.09 18:10:02 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.

**வாதி தரப்பு சாட்சிகள்**

1. வா.சா.1. ஷோபனா (வாதி)

**வாதி தரப்பு சான்றாவணங்கள் -**

| வ. எண் | சான்றாவணங்களின் எண்ணிக்கை | தேதி | விவரம் | ஷரா |
|---|---|---|---|---|
| 1. | வா.த.சா.ஆ.1 | 25.01.1964 | தேதியிட்ட பச்சையப்ப கவுண்டர் என்பவர் பெயரில் உள்ள கிரய ஆவணம் | அசல் |
| 2. | வா.த.சா.ஆ.2 | 02.04.1971 | தேதியிட்ட இராமகிருஷ்ண கவுண்டர் பெயரில் உள்ள கிரய ஆவணம் | அசல் |
| 3. | வா.த.சா.ஆ.3 | 01.06.2022 | தேதியிட்ட வாதியின் பெயரில் உள்ள விற்பனை ஆவணம் | அசல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | வா.த.சா.ஆ.4 | 10.10.2022 | தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சல் ரசீதுடன் | அலுவலக நகல். |
| 5. | வா.த.சா.ஆ.5 | -- | 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள அஞ்சல் ஒப்புகை அட்டை | -- |
| 6. | வா.த.சா.ஆ.6 | -- | 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள அஞ்சல் ஒப்புகை அட்டை | -- |
| 7. | வா.த.சா.ஆ.7 | -- | 3ம் பிரதிவாதி பெயரில் உள்ள அஞ்சல் ஒப்புகை அட்டை | -- |
| 8. | வா.த.சா.ஆ.8 | -- | 4ம் பிரதிவாதி பெயரில் உள்ள அஞ்சல் ஒப்புகை அட்டை | -- |
| 9. | -- | -- | கீழ்கொடுங்காலூர் காவல் ஆய்வாளர் பெயரில் உள்ள அஞ்சல் ஒப்புகை அட்டை | -- |

**நீதிமன்ற சான்றாவணங்கள்**

| வ. எண் | சான்றாவணங்களின் எண்ணிக்கை | தேதி | விவரம் | ஷரா |
|---|---|---|---|---|
| 1. | நீ.ம.சா.ஆ.1 | 17.10.2025 | தேதியிட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கை. | -- |
| 2. | நீ.ம.சா.ஆ.2 | 17.10.2025 | தேதியிட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கை. | -- |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்** - இல்லை

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்** - இல்லை

MAHALAKSHMI C

Digitally signed by MAHALAKSHMI C
Date: 2026.04.09 18:10:39 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வந்தவாசி.